**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

HMOP.40/2025

Civil Case No :: Pw1

Name :: சிவநாத்

Father's/Husband's Name :: சிவகுமார்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 23.03.2026

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகும். திருமணத்தின் போது மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் மற்றும் சி.டி. ம.சா.ஆ.2 ஆகும். மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.3 ஆகும். நான்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் மனு ரசீது அசல் ம.சா.ஆ.4 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு அவரது தாயாரால் வழங்கப்பட்ட சீர்சீராட்டுகள் எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தின் போது நான் கட்டிய தாலியை எதிர்மனுதாரர் என்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான். குடும்ப

பெரியோர்கள் பேசியும், நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ மார்க்கமில்லை என்பதால் தான் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து மனு அனுமதிப்பது எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.